

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.11.2024) கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வழங்கிடும் வகையில் பில்லூர் III கூட்டுக் குடிநீர் திட்டத்தினை குறித்த காலத்தில் செயல்படுத்தி சிறப்பான முறையில் பணியாற்றியதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோவை மண்டல தலைமை பொறியாளர் கே. செல்லமுத்து மற்றும் துறை பணியாளர்களை பாராட்டினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

### சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட - அவர்களை

# தொழில் முனைவோராக உயர்த்தி வருகிறார் முதல்வர்!

## ‘தினத்தந்தி’ நாளேடு பாராட்டு!

சென்னை, நவ. 8 -

**“சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டும் என்ற நோக்கில் அவர்களை தொழில் முனைவோராக உயர்த்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்று ‘தினத்தந்தி’ நாளேடு பாராட்டியுள்ளது.**

இதுகுறித்து 7.11.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:-



தலையங்கம்

தினத்தந்தி DAILY THANTHI

7.11.2024 (வியாழக்கிழமை)

இவர்கள் இனி தொழில் அதிபர்கள்!

சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டும்’ என்பதுதான் நல்லுள்ளம் படைத்த ஆன்றோரின் நோக்கம். ஆனால், அதுவரை சாதி வேறுபாடுகளால் ஒடுக்கப்பட்ட மக்களை கை தூக்கிவிட இடஒதுக்கீடு அவசியம் என்ற வகையில்,



“சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டும்” என்பதுதான் நல்லுள்ளம் படைத்த ஆன்றோரின் நோக்கம். ஆனால், அதுவரை சாதி வேறுபாடுகளால் ஒடுக்கப்பட்ட மக்களை கை தூக்கி விட இடஒதுக்கீடு அவசியம் என்ற வகையில், அரசியல் சட்டத்திலேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அவர்களது உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும், அவர்களது மனித மாண்பை மீட்டெடுப் பதற்காகவும் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் சமூக நீதிப் பாதையை காட்டினார்கள்.

இதில் கலைஞர் அவர்களின் பங்கு அளப்பரியது. 1971ல் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான இடஒதுக்கிட்டை 16 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தினார். அந்த 18 சதவீதம் முழுமையுமே ஆதி திராவிடர்களுக்கே கிடைக்கச் செய்யும் வகையில், மலைவாழ் மக்களுக்கு ஒரு சதவீதம் இடஒதுக்கீட்டை 1990-ல் வழங்கினார்.

இதுமட்டுமல்லாமல், ஆதிதிராவிடரில் தாழ்ந்து கிடக்கும் அருந்ததியினருக்கு 3 சதவீதம் உள் இடஒதுக்கீடும் வழங்கி ஆதிதிராவிடர் வாழ்க்கைத்தரம் உயர வழிவகுத்த ஒரு புரட்சியாளராக கலைஞர் அவர்கள் விளங்கினார்.

அவர் காட்டிய சமூக நீதிப் பாதையில் பீடுநடை போட்டுவரும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சி சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் இருக்க வேண்டும்,

அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட வேண்டும் என்ற வகையில் பல நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

அந்த முயற்சியில், ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் வேலை தேடுபவர்களாக மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு வேலை வழங்குபவர்களாக, அதாவது தொழில்முனைவோராக உயரவேண்டும் என்ற நோக்கில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்தத் திட்டப்படி, இந்தச் சமுதாய மக்கள் உற்பத்தி, வணிகம் மற்றும் சேவை சார்ந்த புதிய தொழில்களைத் தொடங்கினாலோ, ஏற்கனவே தொடங்கியுள்ள தொழில்களை விரிவாக்கம் செய்தாலோ, திட்ட முதலீட்டில் 35 சதவீதம் முதலீட்டு மானியமாக அரசு வழங்கும். மீதமுள்ள 6.5 சதவீதத் தொகையில், அதிகபட்சமாக ரூ.14. கோடி வரை வங்கிக் கடனாக வழங்கப்பட்டு, 6.5 சதவித வங்கிக் கடனுக்கான வட்டி விகிதத்தில், 6 சதவீத வட்டியையும் அரசே ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டு செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் இதுவரை 1,313 ஆதிதிராவிடர், பழங்குடியினத்தைச் சேர்ந்த புதிய தொழில் முனைவோரும், ஏற்கனவே தொழில் முனைவோராக இருப்பவர்களும் புதிய தொழில்களைத் தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும் என்று ரூ.121.61 கோடியை முதலீட்டு மானியமாகப் பெற்றிருக்கிறார்கள்.

இதில் 288 பேர் பெண்கள் என்பது மிகவும் பெருமைக்குரியது. இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவதற்கு கல்வித் தகுதி எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். வயதுவரம்பு மட்டும் 35 வயது என்று கூறப்பட்டுள்ளது.

ஆக. ஆதிதிராவிடர், பழங்குடியினத்தை சேர்ந்த யாரும். அது படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிக்காதவர்களாக இருந்தாலும் சரி, புதிய தொழில்களை அரசு வழங்கும் மானியத்துடன் தொடங்க முடியும்.

அரசின் இந்த முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது. இதுபோல, அனைத்து இளைஞர்களும் வேலை தேடுபவர்களாக மட்டுமல்லாமல், தொழில் தொடங்கி மற்றவர்களுக்கும் வேலை கொடுப்பவர்களாக உயரும் வகையில் வாய்ப்புகளை வழங்க, இதுபோன்ற சலுகைகளை வழங்கினால் வேலையில்லாத் திண்டாட்டமும் மறையும், தமிழ்நாட்டில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்பார்க்கும் தொழில் வளர்ச்சியையும் வேகமாக அடையமுடியும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இளைஞர்களின் அறிவுத்திறம் கண்டு

# என் நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது!

## “நான் முதல்வன் திட்டம்” வெற்றி குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, நவ. 8 –

**‘‘இளைஞர்களின் அறிவுத் திறம் கண்டு என் நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது’’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.**

“நான் முதல்வன்” திட்டத்தின் வெற்றி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் ஒரு பெருமைமிகு பெற்றோராகவும் நமது இளைஞர்களின் அறிவுத்திறம் அங்கீகாரம் பெறுவது கண்டு எனது நெஞ்சம் பெருமித உணர்வால் நிறைகிறது.**

**என் நெஞ்சுக்கு நெருக்கமான “நான் முதல்வன்” திட்டத்தின் வாயிலாக உலக அரங்கில் மிளிரும் இளந்தலைவர்களை நாம் வளர்த்தெடுத்து வருகிறோம்.**

**நமது இளைஞர்கள் நிமிர்ந்து நின்று, “உலகை வெற்றிகொள்ளவும் முன்நடத்திச் செல்லவும் தயார்” என்று பறைசாற்றுகிறார்கள்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; 5.11.2024 அன்று கோவையில் முதல்வர் பங்கேற்ற நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் இசைக்கப்படுவது தவிர்க்கப்பட்டதாக ஒரு நாளேடு ‘குசும்பு’ செய்திருக்கிறதே ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; நேற்று கோவையில் ‘முதல்வர் கள ஆய்வு’ என்றுதான் அறிவிக்கப்பட்டு, அதன்படி நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடந்தன.**

**கள ஆய்வின் முதல் கட்டமாக, தகவல் தொழில் நுட்பப் பூங்கா கட்டிடத்திற்கான கல்வெட்டைத் திறந்துவைத்து, அங்கே அமைய உள்ள மென்பொருள் நிறுவனங்களின் குத்தகைதாரர்களுக்கு இட ஒப்பந்த ஆணைகளை முதல்வர் வழங்கினார்.**

**கள ஆய்வின் இரண்டாவது நிகழ்ச்சியாக, நில எடுப்பு நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டவர்களுக்கு, விடுவிப்பு ஆணைகளை வழங்கினார் முதல்வர்.**

**கள ஆய்வின் அடுத்த கட்டமாக, தொழிலாளர்கள் தங்கும் விடுதிக்கான கட்டுமானப் பணியை ஆய்வு செய்துவிட்டு; கோவை மாவட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகள் மற்றும் அறிவிப்புகளுக்குரிய செயலாக்கம் குறித்தும் முதல்வர் ஆய்வு மேற்கொண்டார்.**

**கள ஆய்வு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்து தேசிய கீதம் இசைக்கப்படுவது பொருத்தமில்லாதது.**

**சென்னைத் தலைமைச் செயலகத்தில்,பல நாட்களில், ஆணைகளையும், விருதுகளையும், சான்றிதழ்களையும், ஆவணங்களையும், உரியோர்க்கு வழங்கி வருகிறார் முதல்வர். அப்போதெல்லாம் வாழ்த்து கீதங்கள் இசைக்கப்படும் வழக்கம் இல்லை; அதற்குரிய பொருத்தமும் இல்லை.**

**ஆளுநர் நிகழ்ச்சியில் ‘ திராவிடநல் திருநாடு’ தவிர்க்கப்பட்ட கடும் கண்டனத்திற்குரிய சம்பவத்தை, முதல்வரின் கள ஆய்வு நிகழ்வுகளுடன் ஒப்பிடுவது, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட முயற்சிக்கும் அறிவீனம் ஆகும் !**

பெருநகர சென்னை மாநகராட்சி
கட்டடத்துறை
க.து.ந.க.எண்.பி1 / 2427 / 2024

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Construction of Various types of buildings at **Zone - I, II, III, IV, V, VI and VIII (TWO COVER SYSTEM) (VCVT),** Construction of Community Hall Building at Gandhiji Street in Div - 44, Zone - 04 **(NNT FUND),** Request for Proposal for the Selection of Firms(s) for Third Party Audit and Quality Assessment of Building Works **and** Third Party Inspection and Testing of Electrical Installation. (18 சிப்பங்கள்)

**அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.749.08 இலட்சம் குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.209.65 இலட்சம்**
**முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பு தொகையில் 1%**

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **04.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி வரை**
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **05.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 4791 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (8.11.2024 - வெள்ளிக்கிழமை) மதியம் 3.00 மணி அளவில், வடலூர், பண்ருட்டி சாலையில் உள்ள மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் "கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்ட அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்மாநில, மாவட்ட மகளிரணி,மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கலந்து கொள்ளவுள்ளனர். அதுசமயம் கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய,நகர, பகுதி,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக சார்பணிகளின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி மாவட்ட, மாநகர,ஒன்றிய,நகர,பகுதி, பேரூர்,வட்டம், வார்டு, கிளை கழக மகளிர்துணை செயலாளர்கள், மகளிர்அணி,மகளிர் தொண்டரணி மாவட்ட, மாநகர,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி மேயர், மண்டல குழு, ஊராட்சிஒன்றிய குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய குழு, மாநகராட்சி நகராட்சி,பேரூராட்சி,ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சி தோப்புகானா பகுதியில் ரூ.15 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, நகராட்சி தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், நகர செயலாளர் ஏ.வி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.